**வாரியபொல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வாரியபொல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாரியபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைபாடுகள் தொடர்பில் விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1(அ) பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகத்தின் மூலம் பொறுப்பளித்தல் கட்டளையின் கீழ் பெறப்பட்டிருந்த 5 ஏக்கர் 2 ரூட் அளவிலான 04 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்து கொள்வதற்காக குறித்துக்கொள்கிறேன் | சபைக்குச் சொந்தமான காணிகள் இனங்காணப்பட்டு முறையாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலும் முன்னைய வருடங்களிலும் காணி ஏல விற்பனைகளின் போது சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட ரூபா. 1,636,562 பெறுமதியான 9 காணிகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 4 ரூட் 24 பர்சஸ் அளவிலான 04 காணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் | ஏலம் விடப்பட்ட சகல காணிகளிலும் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட காணிகளை கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டுடனும் முன்னைய வருடங்களுடனும் தொடர்பான காணி மற்றும் கட்டட அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 10,193,877 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்து கொள்வதற்காக குறித்துக்கொள்கிறேன் | சகல கட்டட அபிவிருத்தி செலவுகளும் மூலதனப்படுத்தப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் முன்னைய வருடங்களிலும் காணி ஏல விற்பனை மூலம் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட ரூபா. 10,417,672 பெறுமதியான 10 காணித்துண்டுகள் தொடர்பான உறுதிப்பத்திரங்கள் ஏல உரிமையாளரினால் சபைக்கு பெற்றுக்கொடுக்காத காரணத்தினால் இக் காணிகளின் உரிமையினை உறுதிப்படுத்த முடியாமை மற்றும் காணிகள் சீரற்ற பாவனைக்கு உட்பட்டிருந்தமையும் கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | ஏல விற்பனைக் காணிகள் இனங்காணப்பட்டு அவை ஆவணப்படுத்தப்பட்டு உரிமையினை உறுதிப்படுத்தும் உறுதிப்பத்திரங்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 மார்ச் PL/7/1/18/1 பொது இலக்க அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | மாகாண சபை அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் நிதியத்தினூடாக இலவசமாக பொருட்கள் வழங்குவதை ஊக்குவிக்கப்படக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருந்தும், சபை நிதியத்தினால் கொவிட் தொற்றுக்காலத்தில் 2020 மே 29 ஆந் திகதி 1,360 உணவுப்பொதிகள் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 1,567,935 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | வடமேல் மாகாண கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு இச் செலவு மேற்கொள்ளப்பட்டுள் ளதென குறிப்பிடுகிறேன். | இத்தகைய இடர் காலங்களின் போது செயற்படுவதற்காக வெளியிடப்பட்டுள்ள அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1996 மார்ச் 10 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை 22 மற்றும் 1996 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டமிடல் மற்றும் கட்டட கட்டளை | பிரிக்கப்பட்ட காணியில் பாதைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசம் தவிர்ந்த எஞ்சிய பகுதியில் 10 வீதமான காணியினை பொது தேவைகளுக்காக பிரதேச சபை ஒதுக்கிக்கொள்ள வேண்டியிருந்த போதும், ஏலம் விடப்பட்ட 05 காணிகளில் பொது தேவைகளுக்காக பெற்றுக்கொள்ள வேண்டிய 288.84 பர்சஸ் காணிக்கான உறுதிப்பத்திரங்கள் கோவையில் இருக்கவில்லை. | சில காணிகளில் எல்லைகள் பிரிக்கப்பட்டுள்ள அதேவேளை, உறுதிப்பத்திரங்களைப் பெற்றுத் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளதெ ன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிஹின் சிடி லேன்ட்', மிஹின் சிடி ரிச் லேன்ட் என திருத்தப்பட வேண்டிய அதேவேளை 98.5 பர்சஸ் பரப்பளவுள்ள காணி கிடைக்கப்பெற்றுள்ளது. | ஏல விற்பனைக் காணிகளிலிருந்து பொதுத் தேவைகளுக்கான காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 59,226,510 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,608,022 ஆக இருந்தது.

### 2.2 நிதி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஜனவரி 01ஆந் திகதியன்று அரச வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த சபையிடம் காணப்பட்ட ரூபா. 108,896,424 பெறுமதியான நிலையான வைப்புக்களில் ரூபா. 66,609,779 பெறுமதியான 05 நிலையான வைப்புக்கள் விடுவிக்கப்பட்டிருந்த போதும், அதற்கான சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. சபையின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் செலவுகளுக்கான பூரண மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதும், இந் கைத்தொழிலை நிறுவுவது தொடர்பில் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான அனுமதியொன்று பெறப்பட வேண்டுமென விதிகளில் அல்லது சட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பொதுச் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று நிலையான வைப்புகளில் மாற்றம் செய்யப்படல் வேண்டும். இந் நிலையான வைப்புகளிலிருந்து பூரண மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அனுமதி பெற்ற பின்னர் செலவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹொரொம்புவ ஏலம் விடப்பட்ட நிலத்தில் விளையாட்டரங்கொன்றினை அமைப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது இக் காணியில் இருந்த 19 தென்னை மரங்கள் வெட்டி அகற்றப்பட்டிருந்தன. இவ் விளையாட்டரங்கினை அமைப்பதற்காக 2019ஆம் ஆண்டு சபை நிதியின் மூலம் ரூபா. 946,350 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கரப்பந்து விளையாட்டரங்கினை உடைத்து அகற்றுவது பொருத்தமானது எனத் தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இக் காணியில் நிர்மாணிப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டரங்கின் ஒரு பகுதி அனுமதியின்றி மண் வெட்டப்பட்டு அகற்றப்படுவதற்கு வெளியாரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த பொரல் மண் வெட்டுவது தொடர்பில் சபைத் தலைவருக்கு எதிராக வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருகிறது. | சபைக்குச் சொந்தமான காணிகளில் மரங்கள் அகற்றப்படுவதற்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பிரயோசனமுள்ள திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு சபை நிதியினை செலவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொதுச் சந்தையின் கீழ் மாடி மற்றும் முதலாம் மாடியிலுள்ள 48 கடைகள் 2019 ஜுலை மாதம் 19ஆம் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அம் மதிப்பீடு செயற்படுத்தப்படாததன் காரணமாக 2020ஆம் ஆண்டுக்கான ரூபா. 2,202,300 வருமானத்தினை சபை இழந்திருந்தது. | மதிப்பீட்டினை செயற்படுத்துவதற்கு 2019 ஆகஸ்ட் 28 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் நிலையான பொது நிருவாகக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ள அதேவேளை, எதிர்ப்புகள் காரணமாக அறவிடப்படாமல் இருந்த போதும், இக் கடைகள் அனைத்தினதும் மாதாந்த வாடகை புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். | புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ள கடை வாடகையினை விரைவில் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய வீதவரி, அக்கரை வரி, வாடகை, வழக்கு மற்றும் கைத்தொழில் கடன்பட்டோர் கூட்டுத்தொகை பெறுமதி ரூபா. 101,698,148 ஆகவிருந்தது. இது தொடர்பான கால மீளாய்வின் அடிப்படையில் ஒன்று தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலான கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 18,731,370 ஆகவும் 05 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 91,560 ஆகவும் காணப்பட்டது. | இம் மீதிகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | பெற வேண்டிய தொகைகள் தொடர்பாக ஆராய்ந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்தினது குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020ஆம் ஆண்டு கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அவுலேகம நடடவெவ பாதைக்கு தார் இடும் திட்டத்திற்காக ரூபா. 1,768,565 தொகை செலவிடப்பட்டிருந்தது. பௌதீக அவதானிப்பின் போது இப் பாதையின் சுமார் 400 மீற்றர் நீளத்திற்கு வேலையின் முடிவு பலவீனமானதாகக் காணப்பட்டது. மொத்தமாக பாதையில் சுமார் 1.5 அங்குல கற்கள் வெளி வந்திருந்ததுடன் பாதையின் மேற்பரப்பு மிருதுவாகக் காணப்படாததுடன் பாதையின் இரு மருங்கின் வேலைகளும் நிறைவின்றிக் காணப்பட்டது. பாதையின் இரு மருங்கிலும் சுமார் 300 மி.மீற்றர் அளவு பாதையின் மத்தியில் இருந்த தார் கலவையை விடக் குறைவான தரத்திலேயே காணப்பட்டது. | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதுடன் இப் பாதைக்கான நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவு இன்னும் விடுவிக்கப்படாததுடன் இக் குறைபாடுகளை சீர் செய்து தருமாறு ஒப்பந்த நிறுவனத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்ப தையும் தெரிவிக்கிறேன். | வீதி நிர்மாணத்தின் தொழில்நுட்ப அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் குறித்த தரத்திற்கேற்ப செயற்படல் வேண்டும். பாதையின் குறைபாடுகளை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |